1974 மார்ச் 16]

கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய பகுதியில் சில இடங்களில் வைகை அணையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆற்று மணலில் 2 வீல் டிரைவ் ஜீப்கள் போக முடிவது இல்லை. ஆகவே, வைகைப் பகுதியில் இருக்கும் ஊராட்சிகளுக்கு மட்டும் 4 வீல் ஜீப்கள் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

முற்பகல், 10-00

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய தனிப்பட்ட நிலைமைகள் குறித்து நிச்சயமாகத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

மாயூரத்தில் பேருந்துப் பணிமனை.

* 390 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மாயூரத்திலுள்ள சோழன் போக்குவரத்துக் கழகக் கிளைக்காக புதிய பணிமனைக் கட்டிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகம் புதிய பணி மனையை மாயூரத்தில் கட்ட இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எந்த இடத்தில் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலில் தாற்காலிக ஷெட் ரூ. 25,400 செலவில் மாயூரத்தில் கட்டி, அந்தப் பணிமனையைத் துவக்குவதாக ஏற்பாடாகியிருக்கிறது.

Sale of eggs in Milk Depots.

* 470 *Q*.— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to sell eggs at the Milk Kiosks in Madras City ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு கோழி வளர்ப்புக் கழகம் சென்னை மாநகரில் உள்ள 300 பால் விற்பனை நிலையங்களில் 21 விற்பனை நிலையங்களைத் தெரிந்தெடுத்து அவற்றின்மூலம் முட்டைகளை விற்பனை செய்து வருகிறது.

[1974 மார்ச் 16

திரு. என். டென்னிஸ் : வாங்குவதற்கு வசதியாகவும் லாபகரமாகவும் இந்த முறை இருக்கிற காரணத்தினால் இந்த முறையை வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ் நாடு கோழி வளர்ப்புக் கழகம் 300 பால் விற்பனை நிலையங்களில் 21 இடங்களை தேர்ந்தெடுத்து விற்பனை செய்து வருகிறார்கள். விற்பனை செய்கின்ற விற்பனையாளர்களுக்கு முட்டை ஒன்றுக்கு ஒரு காசு தரகுத் தொகை தருகிறார்கள். மேற் கொண்டு அப்படிப்பட்ட இடம் தேவைப்படும் என்று அந்தக் கோழி வளர்ப்புக் கழகத்தினர் கருதினால் பால் துறை தருவதற்கு தயாராக உள்ளது.

திரு. கோவை. செழியன் : பால் விற்பனை நிலையங்களில் முட்டைகள் விற்பதை சைவர்கள் யாராவது ஆட்சேபித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன : முட்டையும் சைவ உணவாகத் தான் இப்பொழுது கருதப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : சென்னையிலே முட்டை விற்பதற்கு பால் விற்பனை நிலையங்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நெல்லை மாவட்டத் தில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் பல இடங்களில் கோழிப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு முட்டைகள் அங்கு குறைந்த விலையில் விற்கப் படுகின்றன. அதிக விலைக்கு வாங்குவதற்கு ஆள் இல்லை. ஆகவே, அந்த முட்டைகளை அதிக விலைக்கு வாங்குவதற்கு — இங்கே முட்டை அதிக விலை விற்கிறது—அந்த முட்டைகளை அதிக விலைக்கு வாங்கி விற்பதற்கு இந்த வாரியத்தின்மூலம் ஏற்பாடு செய்ய ஏதாவது அரசுக்கு உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : முட்டைகளை பால் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பதற்கு பால் துறையிலே அனுமதி தந்திருக்கி றோம். அங்கே தேங்கி இருக்கிற முட்டைகளை வாங்கி விற்பதைப்பற்றிக் கோழி வளர்ப்புக்கழகத்தை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு— ஓர் உரையின தொடக்கததில் *வெள்ளிக்குறி இடப்பட்டி ருந்தால் கல்புரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது எனபதைக் குறிக்கும்.